தொகுதி-௫௯ :: பகுதி-௩ — Vol. 59 :: No. 3

# செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1994
சோபகிருது—ஆனி
JUNE—1963

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 3—8—63)

உ

உள்ளுறை

பொறியுணர்வும் மனவுணர்வும்,
ந. சுப்புரெட்டியார் 65

இலக்கியத்தில் தேன் நிலவு,
தி. நா. அறிவு ஒளி 72

எழு பிறப்பு,
சாமி பழனியப்பன் 83

''மொழி''
எஸ். கிருஷ்ணஸ்வாமி 89

## ''செந்தமிழ்'' ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law.)
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர், திரு, மா. இராசமாணிக்கனுர் M. A. L. T. M. O. L. Ph. D சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வீ. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர் மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை
7. திரு. கி. பழநியப்பன், கழகக் காவலர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.
9. வித்துவான். மு. உலகநாதன் தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்

| தொகுதி ருகூ | திருவள்ளுவர் ஆண்டு 1994 | பகுதி ந |
| --- | --- | --- |
| Vol 59 | சோபகிருது — ஆனி<br>1963—JUNE | No. 3 |


[32-ம் பக்கத் தொடர்ச்சி]

# பொறியுணர்வும் மனவுணர்வும்.

—o—

பேராசிரியர். ந. சுப்புரெட்டியார்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்,
திருப்பதி.

—*—

மன உணர்வு இன்றேல் உயிர்கள் இன்பதுன்பங்களை யாங்ஙனம் நுகர்தல்இயலும்? ஒருபொருளைக் குறித்து மனம் எண்ணிக் கொண்டிருக்கும் நிலையில் மற்றொரு பொருள் கண்ணெதிர்ப் பட்டால் அதனைக் கண்ணென்னும் பொறியுணர்வு கொள்ள அவ்வுணர்வின் வழியேமனம் திரிந்து அக்காட்சியில் ஈடுபடுதல் இயல்பு. அப்பொருளின் தோற்றத்தை மனத்திற்கு அறிவித்தது பொறியுணர் வாதலின் மனவுணர்வும் பொறியுணர்வும் தம்முள் வேற்றுமையுடையன என்பது தெள்ளிதின் விளங்கும்.

அன்றியும், தேனாகிய சுவைப்பொருளை நாவென்னும் பொறிவுணர்ந்தவழி இன்புறுதலும், அதனையே கண்ணுள்பெய்து மெய்யுணர்ந்தவழித் துன்புறுதலும், நறிதாயின மான்மதத்தினை (கத்தூரி) மூக்குஉணர்ந்தவழி இன்புறுதலும் அதனையே கண் உணர்ந்தவழி இன்பங்கொள்ளாமையும் உடை

மையால், அவை அவ்வப்பொறியுணர்வு எனப்படும். ஐம்பொறிகளின் துணைவேண்டாது பொருள்களின் நலந்தீங்குகளைப் பகுத்துணரும் ஆற்றல் கனவுநிலையிற் போன்று நனவுநிலையிலும் மனத்திற்கு உண்டு என்பதைப் பண்டையோர் அறிந்தனர். அங்ஙனம் பொறிகளின் துணையின்றி மனம்தானே உய்த்துணரும் உணர்வு மனவுணர்வுஎனப்படும். இன்றைய உளவியலார் இதனைக் கருத்துநிலைச்சிந்தனை 14 என்றுகூறுவர். இவற்றுள் ஐம்பொறியுணர்வுக்கும் அடிப்படையாய் முற்பிறந்தது மனவுணர்வாமாகவே பொறிவுணர்வென்பது, இதனை நுகர்கின்றேம் என்று எண்ணும் உய்த்துணர்வுக்கு இடமின்றியே அவ்வப்பொறிகளுக்கு அமைந்த பழக்கமெனக்கருதும்படி தன்னியல்பில் நிகழ்வதாகும்என்பது அறிதற்பாலது. பண்டைய அறிஞர்களுள் ஒன்றுமுதல் ஐயறிவுடைய உயிர்கட்கு மனஉணர்வு இல்லைஎன்பாரும் உண்டென்பாரும் இருவகைக்கட்சியினர் உளர் என்றுமேலே குறிப்பிட்டோம். பிராணிகளின் நடத்தைகளிலிருந்து இதனை ஒருவாறு ஊகிக்கலாம். ஆறறிவுடையமக்களுக்கு மனம் அமைந்திருக்கும் அளவுக்கு அவற்றிடம் மனம்அமைந்திராவிடினும் படிவளர்ச்சி முறையில் அவற்றிடம் அஃதுஅமைந்திருக்கவேண்டும் என்று ஊகிக்க இடமுண்டு. இன்றைய உளவியல் இந்தத் துறையில் ஆராயத் துணை செய்துள்ளது.

## மனஉணர்வு பற்றிய ஆராய்ச்சி:

பாவ்லோவ் 15 என்றஇரஷ்யஅறிஞரும், வாட்சன் 16 என்ற அமெரிக்க அறிஞரும் கற்றல் அனைத்தும் மறிவினைச் செயல்களின் 17 தொகுதி என்கின்றனர். எடுத்துக்காட்டாக, ஒருநாயின் வாயில் உணவு சேர்ந்த

14 கருத்துநிலைச் சிந்தனை - IDEATIONAL THINKING
15 பாவ்லோவ் - PAVLOV
16 வாட்சன் - WATSON
17 மறிவினைச்செயல் - REFLEX ACTION

வுடன் உமிழ் நீர் ஊறுதல் இயற்கை மறிவினையாகும். உணவிடும் போதெல்லாம் ஒருமணியோசையை எழுப்பிவந்தால் உணவிடுதலும் மணியோசையும் இயைபுபெற்று முற்கூறிய தூண்டலின் துலங்கலாகிய உமிழ் நீர் ஊறுதல், பிற்கூறியதூண்டலின் துலங்கலாகிவிடுகின்றது. உணவின்றி மணியொலியையமட்டிலும் எழுப்பினாலும் நாயின் வாயில் உமிழ் நீர் ஊறுகின்றது. இதைக் 'கற்ற மறிவினை' அல்லது 'ஆக்கமறிவினை' 18 என்பர் உளவியலார். மனிதரிடமும் இத்தகைய ஆக்க மறிவினைகள் ஏற்படுகின்றன. ஒரு தாய் ஒரு குழந்தையிடம் ஒருபந்தினைக் கொடுத்தால் அக்குழந்தை பந்தினைத் தடவிப்பாற்கின்றது. அப்போதே, 'பந்து, பந்து' என்று அவள் உரைத்தால் அதுவும் அப்பெயரை அப்பொருளுடன் தொடர்புறுத்தி, அதனைக்கண்ட பொழுதெல்லாம் 'பந்து' என்கின்றது. இங்ஙனமே, ஆக்கமறிவினை முறையில் மொழியறிவு உண்டாகின்றது இவ்வாறே நம்விருப்பப் பொருள்களும் வெறுப்புப் பொள்களும் அச்சம் போன்ற உள்ளக் கிளர்ச்சிகளும் அமைகின்றன என்பர் உளவியலறிஞர்கள். இவ்வுண்மையிலிருந்தும் மக்களின்கீழான உயிர்களிடம் மனிதனைபோல் சிந்தனை, ஆய்தல் போன்றசெயல்களை புரியும்மனம் என்ற ஒன்று இல்லையென்றும் ஊகிக்க இடம் ஏற்படுகின்றது. கீழான உயிர்களின் மனம் பற்றிய ஆராய்ச்சிகளில் இன்னும் உளவியல் ஒருவித திட்டமானமுடிவுக்கு வரவில்லை.

புழுப்போன்ற சாதாரண பிராணிகளுக்கும் மூளை உள்ளது. சாதாரணமாக ஒரு மானிடமூளையின் எடை மூன்றுராத்தல்கள்; யானைமூளையின் எடைபத்து ராத்தல்கள்; திமிங்கலமூளையின்எடை பதினான்கு இராத்தல்கள். மனிதன் சிறந்த அறிவுடையவனாக இருப்பதற்கு மூளையின் அளவிலிருந்து ஊகிப்பதைவிட மூளையின் எடைக்கும்உடலின் எடைக்குமுள்ள விகித அளவு சரியானகருத்தேற்றத்தைத் தருகின்றது. இந்தஅளவுமுறையே மனிதனுக்கு 1/50ம், யானைக்கு 1/500ம், திமிங்கிலத்திற்கு 1/10,000 மும்

18 ஆக்கமறிவினை - CONDITIONAL REFLEX

உள்ளது. மூளைபல செயல்களுடன் கொள்வாய்களையும் உடற் பாகங்களையும் ஒருமைப்பாட்டுடன் செயற்படச் செய்கின்றது. ஒரு பெரிய உடலிலுள்ள ஒவ்வொரு கொள்வாய்யும் தசையும் உடலு டன் போதுமான அளவு ஒருமைப்பாடு அடைவதற்கு நாம்பிணைப் புக்களைப்பெற்றிருத்தல்வேண்டும். அஃதாவது, உடல்கள் பெரிதா கப் பெரிதாக, புலன் ஒருமைப்பாட்டிற்கும் இயக்க ஒருமைப்பாட் டிற்கும் அதிகமான மூளை இழையங்கள்19 தேவைப்படுகின்றன; இதில் செரிமானச் செயலும் மூச்சு வாங்கும் செயலும்அடங்கும். அதிகமான மூளை இழையங்களைப்பெருத கீழ்நிலை உயிரிகள் 20 யாவும் இயல்பூக்கத்திஞலேயே செயற்படுகின்றன. அஃதாவது அவை கொள்வாய்–இயங்குவாய் இணைப்புக்களால் மட்டிலும் ஆதிக்கம்பெறுகின்றன. மூளைக்கும் தண்டு வடத்திற்கும் உள்ள விகிதத்தைக்கவனித்தால்இவ்வுண்மை இன்னும்தெளிவாகின்றது. மூளையின் பருமனுக்கேற்றவாறு தண்டு வடத்தின் பருமனும் அதிகமாகின்றது. படிவளர்ச்சியில் தண்டு வடத்தைவிட மூளை மிகப்பெரிதாகின்றது. மனிதக் குரங்கினிடம் தண்டு வடத்தைவிட மூளை எடையில் பதினைந்துமடங்கு பெரியது. நம்மிடம் அஃது ஐம் பத்தைந்து மடங்கு பெரியதாகும்.

மேற்கூறிய புல, இயக்கச் செயல்களை மட்டிலும்கவனிக்கும் மூளையமைப்புக்கள் மீன்கள், பறவைகள், ஊர்வன, தவளையினங் கள் போன்றவற்றிடம் காணப் பெறுகின்றன. பிராணிகளிடம் பெருமூளை என்றஒருபகுதிதோன்றி அது பாலுணிகளிடம்21 எல்லா மூளையமைப்புக்களை விடவும்பெரிதாக வளர்ந்தது. முதலில் அதன் செயல்கள் முற்றிலும் நடைமுறைச் செயல்களாகவே இருந்தன. சிக்கல் அதிகமாக அதிகமாக, பெருமூளையில் இணைப்பு மையங் கள் என்றபகுதிகள் தோன்றிவளர்ந்தன. இவைமூளையின் வெளிப்

19 இழையம் - EISSUE

20 உயிரிகள் - ORGANISMS

21 பாலுணி - MAMMAL

புறப்பகுதியில் உள்ளன. இவற்றின் அடுக்குகளே பெருமூளையின் புறணியாகும்22 இப்பகுதிகள் பாலுணிகளிடம் மிகப்பரந்துகாணப் பெறுகின்றன மனிதனிடம் இப்பகுதிகள் அதிகமாக உள்ளன; நாயிடமும் மனிதக்குரங்கினிடமும் இப்பகுதிகள் அதிகமாக இருப் பினும் அவற்றுள் இணைப்பு மையங்களாகச் செயற்படுபவை மிகக் குறைந்தே காணப்பெறுகின்றன. இந்த இணைப்பு மையங்களின் வளைந்து கொடுக்கும் தன்மையைப் பொறுத்தே மனிதன் ஆறறிவு டையவனுகக் காணப்பெறுகின்ருன். இதன்காரணமாக மனிதனி டம் கற்றலும், கற்றனவற்றையும் கடந்தவற்றையும் நினைவு கூர்தலும், சிந்தனை செய்தலும் நடைபெறுகின்றன. பெருமூளைப் புறணியில் காணப்பெறும் அதிக மடிப்புக்களுக்கேற்றவாறு மனி தன் அறிதிறன் 23 மிக்கவனுகக் காணப்பெறுகின்ருன் என்பர் உளவியலார். இதன் விவரங்களை உளநூல்களில்கண்டு தெளிக. ஈண்டு விரிப்பிற்பெருகும்.

பொதுவாக, பிராணிகள் இயல்பூக்கங்களால் செயற்படு கின்றன. இந்த இயல்பூக்கங்களும் பிராணிகளின் பிறப்பிலிருந்து அவை முதிர்ச்சியடையும் வரை மாறிக்கொண்டே வருகின்றன. ஒரு பூச்சியின் புழுப் பருவநிலையினையே அல்லது ஒரு பறவையின் குஞ்சு அல்லது பாலுணியின் குட்டியையோ உற்றுநோக்கின், அவற்றின் நடத்தை அவற்றின் வளர்ந்த பிராணிகளின் நடத்தை யினின்றும்வேறுபடுவதை அறியலாம். ஆனுல்உயிர்நிலைப்பிராணிக ளிடம்நினைவாற்றல் அதிகமாகஇருப்பதாலும் அறிதிறன்தோன்றத் தொடங்குவதாலும் இந்த இயல்பூக்கங்கள் அனுபவத்திற் கேற்ற வாறு மாறக்கூடியவையாக உள்ளன; அவற்றிடம் கற்றல் என்ற செயலும் தொடங்குகின்றது· அனுபவத்தால் ஏற்படும் இயல்பூக்க நடத்தையின் மாற்றங்கள் மிக அரியனவாகவே உள்ளன; பெரும் பாலான இயல்பூக்கங்கள் குடிவழியாகஅவற்றின் வழித்தோன்றல்

22 பெருமுளையின் புறணி - CAREBRALCORTEX

23 அறிதிறன் - INTALLIGENCE

களுக்கும் இறங்குகின்றன.

மனிதன் மிகச் சிக்கலான மூளையமைப்பின் காரணமாகவும் அதுபல்வேறு தேர்ந்தெடுத்தல்களின் களஞ்சியமாக இருப்பதாலும் அவனுடைய மனவாழ்வு 24 மிக வளமுள்ளதாக அமைந்து உள்ளது; படைப்புச்செயலுக்குப் பல வாய்ப்புக்களைத் தருவதாக வும் உள்ளது. அவனுடைய மூளையும் திட்டமான கோலங்களைக் கொண்ட நட்பிணைப்புக்களால் மட்டிலும் கட்டுப்பட்டிருக்கவில்லை. அவனிடம் முதல்முதலாகப் பகுத்தறிவு முறையில் கட்டுப்பாடுள்ள நடத்தை முழுநிலையில் வளர்ச்சி பெற்றுள்ளது. இது பல்வேறு நோக்கங்கள் எய்துவதில் கொண்டு செலுத்துகின்றது; இதனுல் அவனுடைய நடத்தையிலும் பல்வேறுவகைகளைக் காண்கின்றேம். இந்த நடத்தைக்கோலம் உயிர்பிராணிகளின் நடத்தையைவிடப் பெரியது; விரிந்தநிலையிலிருப்பது. அவனுடைய நினைவாற்றலும் மிக விரிந்தநிலையிலிருப்பதால், சிறப்புக்கூறுகளைப் பொதுக்கூறு களுடன் இணைத்து ஆய்தல் நிகழ்த்துவதும் அவனுக்குச் சாத்திய மாகின்றது.

இவற்றின் காரணமாக அவன் பிராணிகளைவிட அதிக மாகக் கற்கின்ருன்; தன் அனுபவத்தினுலும் பிறருடைய அனுபவத் தாலும் அதிகப்பயனை அடைகின்ருன். அவன் வாழுங்காலத்திலுள் ளாரின் அனுபவத்துடன் கடந்தகாலத்தில் வாழ்ந்தவர்களின் அனு பவமும் அவனுக்குத் துணைபுரிகின்றது இதன்காரணமாக அவன் சூழ்நிலையின் அறிவை நன்கு அறிகின்ருன்; அதனைச்சிறந்த முறையில் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரவும் கற்றுக்கொள்கிருன் கந்துக மதக்கரியை வசமாய் நடத்துகின்ருன்; கரடி வெம்புலி வாயையும் கட்டுகின்ருன்; சிறகின்றியே வானில் பறக்கின்ருன்; செவுள்களின்றியே நீரின் அடியில் பிரயாணம் செய்கின்ருன்; கோடையைத் தட்பநிலையாக்கவும் மாரியை வெப்பநிலையாக்கவும் அறிந்துகொண்டுள்ளான். இவையாவும் இவனுடைய ஆருவது

24 மனவாழ்வு - PSYCHICAL LIFE

அறிவினுல்-மனஅறிவினுல் நடைபெறுகின்றன. ''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்ற வள்ளுவர் வாக்கும் இதன்காரண மாகவே எழுந்தது. மேலும், கற்பனை செய்யும் ஆற்றலும் மனிதனு டைய அறிவை வளர்ப்பதற்கு முதற்காரணமாக அமைந்துள்ளது. கற்பனையே படைப்பாற்றலின் அடிப்படையாகும். ஆக்கநிலைக் கற்பனையே 25 இதில் பெரும் பங்கு கொள்ளுகின்றது. கவிதை, இசை, ஓவியம் போன்ற துறைகளிலும் மனிதனுடைய கற்பனை யின் செல்வாக்கை அறியலாம். இவைபற்றிய பலவிவரங்களை அறிஞர் நூல்களில் 26 கண்டுகொள்க.

மன ஆற்றலின் காரணமாகவே மனிதன் மொழியைப் படைத்துக்கொண்டான். அவன் படைத்த மொழி உணரஉணர்த் தலும், உணர்த்த உணரலும் என இருவகை அறிவியக்கத்திற்குப் பயன்படுகின்றது. அவன் கண்ட மொழியும் அவ்வியக்கத்திற் கேற்ற சொற்களாகிய குறியீடுகளின் அமைப்பினைக்கொண்டு சிறந்த முறையில் இயக்கிவருகின்றது. இந்த முறையிலமைந்த மொழியும் அவனுடைய அறிவு வளர்ச்சிக்கு மேலும் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இதன் காரணமாகவே, படிவளர்ச்சி ஏணியில் மனிதன் கொடுமுடியில் அமர்ந் திருக்கின்ருன்.

மேற்கூறியவற்ருல் பொறியுணர்வு,மனவுணர்வு இன்னவை என்பதும், படிவளர்ச்சியில் குரங்கு, நாய் போன்ற பிராணிகளி டம் மனவுணர்வின் கூறு மிகக் குறைவாய் அமைந்துள்ளது என் பதும், கீழான உயிர்களிடம் மனிதனிடம் அமைந்திருப்பதைப் போல் சிந்தனை, ஆய்தல் போன்ற செயல்களில் பங்குபெறும் மன வுணர்வு அமையவில்லை என்பதும், இதனுல் இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்ட இரண்டாவது கட்சியினரின் கொள்கை வலியுறுகின்றது என்பதும் அறியக்கிடக்கின்றன.

---

25 ஆக்கநிலைக் கற்பனை - CREATIVE IMAGINATION

26 EDMUND W SINNOT: MABLER, MIND AND MAN--PP (102 - 150)

# இலக்கியத்தில் தேன் நிலவு!

## புலவர். தி. நா. அறிவுஒளி.

திருமணம் முடிந்ததும் இளம் மணமக்கள் இன்பமாக இணைந்து காதல் விளையாட்டுகளில்திளைத்து இளமைப்பயன்பெறத் 'தேன் நிலவு' (HONEY-MOON) சுற்றுலா செல்வது தற்கால மேனாட்டு வழக்கு. இவ்வழக்கு எல்லா நாட்டினருக்கும் பரவிவரு கிறது. நம் நாட்டினரும் பலர் கைக்கொண்டுவருகின்றனர். இவ்வழக்கு 'புதுமையானது' எனவும் கருதுவர். ஆயின் வர லாற்று-இலக்கிய ஆராய்ச்சியால் 'இப்புதுமரபு' நனி பழம் ஒழுக் கம் என்பதைத் தெளியலாம்.

சங்க காலத்தில் 'உடன்போக்கில்' செல்லும் காதலர் தண்பூம்பொழிலில் தங்கி ஓய்வெடுத்தும், உண்டுறங்கியும், உவந் தும் ஊடியும் கூடியும் இனிதே செல்வர். இம்மரபே மணமக்கள் இயற்கை எழில் கொழிக்கும் இனிய இடங்கட்குச் செல்லும் ஒழுக லாற்றைத் தோற்றுவித்தது. இவ்வுண்மையைத் தொல்காப்பியத் துக்கற்பியல் நூற்பாவாலும் அறியலாம்.

"யாறுங் குளனுங் காவும் ஆடிப்
பதிஇகந்து நுகர்தலும் உரிய என்ப"

(தொல்—கற்பு: 189)

தலைவன்-தலைவி இருவரும் ஆறு, குளம் (கடல், பேரேரி, அருவி) ஆகிய இடங்களுக்கும், காடு, பூங்கா, சோலைகளுக்கும் சென்று இன்பமாக விளையாடி, விருந்துண்டு மகிழ்வர். இவ்வாறு இனிய பொழுதுபோக்கும் இடம் ஊருக்கு வெளியே-தொலைவில்-

அமைந்ததாம். இதனைப் 'பதி இகந்து' என்ற தொடர் குறிப் பிடுகிறது.

இத்தமிழ் மரபைச் சங்க இலக்கியங்களும் நனிவிரிவாகப் பாடுகின்றன. இப்பழந்தமிழ் நாகரிகம் காப்பியகாலத்திலும் வழக்கு மாறவில்லை என்பதைச் சிலப்பதிகாரம் நிலைநாட்டுகிறது. செங்குட்டுவனும், துணைவியும் மலைவளம் காணச்சென்ற நிகழ்ச்சி யாவரும் அறிந்ததே.

பெருங்கதையிலும் உதயணன்-வாசதத்தை குழுவினர் மலைச்சாரலை மன மகிழ்வுக்காக அணுகியமையை 'மாசனமகிழ்ந் தது'(12), 'குறிக்கோட் கேட்டது' (13) என்ற தலைப்புக்களில் இலாவண காண்டத்தில் புலவர் கொங்குவேளிர் நனிவிரிவாகப் பாடுகிறார்.

'புக்கோர் புறப்படல் உருப்பொலிவிற், சுனையும் யாறும் இணையவைமல்கி மேவரவமைந்த மேதகு வனப்பு'டைய அப்பொழி லில் உள்ள மரக்குழுவை, இருபத்தொரு அடிகளில் விளக்குகிறார் கொங்குவேளிர். அவண் ஒரு பாடிவீடு பெரிதாக அமைத்துத் தங் குவதையும், மகளிரும் மைந்தரும் பல்வகை இயற்கைக் காட்சிக ளைக்கண்டு உவப்பதையும் (40-ஆம் அடியிலிருந்து 156-ஆம் அடிவரை) விரிவாக விளக்குகிறார்.

இம்மரபைப் பின் வந்த அணி இலக்கணம் செய்த தண்டி யார் தம்நூலில் பெருங்காப்பியங்களுக்குரிய இலக்கணத்தைத் தொகுத்துக் கூறும் நூற்பாவில்,

''மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றம் என்று இனையன புனைந்து,
நன்மணம் புணர்தல்: பொன்முடி கவித்தல்
'பூம்பொழில் நுகர்தல் புனல் விளையாடல்,
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்

புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தல் என்று
இன்னன புணந்த நன்னடைத்தாகி..."

அமைவது காப்பிய மரபு எனக் கூறுமிடத்தில், 'பூம்பொழில் நுகர் தலையும் புனல் விளையாடலையும்' குறித்துள்ளார். தொல்காப்பியத் தமிழ் நாகரிகமாக விளங்கிய ஒழுக்கம் பிற்காலத்தில் காப்பிய இலக்கண அழகாக இடம்பெற்று வளர்ந்த நிலை கருதற்குரியது. பிற்காலக் காப்பியப் புலவர்களில் பெரும்பாலோர் இவ்விலக்கண மரபை விடாது கடைப்பிடித்தொழுகியுள்ளனர்.

'நள-வெண்பா'வில் புகழேந்தியார் நளனுக்கும் தமயந்திக் கும் திருமணம் முடிந்த பின் தன்னூர்க்கு அவன் அவளை அழைத் துச்செல்லும் இடைவழியில் சோலைவளம் இயற்கை எழில் முதலி யன காட்டி இன்புறுத்தி; அச்சோலையில் தங்கி உரையாடியும் ஊடலொடு கூடல் விளைத்தும் இன்புறுவதை (181-ஆம் பாவிலி ருந்து 207-ஆம் பாடல்வரை) இருபத்தேழு வெண்பாக்களில் அழகொழுக ஓவியமாக்கியுள்ளார்.

"பொய்கையும் வாசப் பொழிலும் எழில் அருவிச்
செய்குன்றும் ஆறும்திரிந்து ஆடித்-தையலுடன்
ஆறு இரண்டு ஆண்(டு) எல்லை கழித்தான்
அடைபாலரைக்
கூறு இரண்டாக் கொல்யானைக் கோ."
(நளவெண்பா: 207)

என்றபாடலால்'காதலர் இன்பச்சுற்றுலா' மேற்கொண்டு மகிழ்ந்து வாழ்ந்தமையைத் தெளிவாக்குகிறார். மேலும் பலகவிஞர் பெருமக் கள் இம்மரபைப் பாராட்டிப் பாடியுள்ளனர்.

'அரிச்சந்திரன் காதை' பாடிய நல்லூர் வீரகவிஞர் இசை யினிமையும் கவியழகும் கனிந்ததன் காப்பியத்தில் 'அரிச்சந்தி

ரன்-சந்திரமதி' தேன்-நிலவுக் காட்சியைச் சுவைபொதுள விளக்கியுள்ளார்.

கன்னமாநாட்டில் (கன்னேசி) அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் திருமணம்முடிந்தது. சிலநாட்கள் இன்பம் துய்த்து மணமக்கள் ஆண்டிருந்தனர். பிறகு அரிச்சந்திரன் தன்துணேவியை அழைத்துக்கொண்டு அயோத்திசெல்ல முடிவுசெய்தான்.

மன்னனும் அன்னமென்னும் நடைமயிலும் ஆணிநெடுந் தேர் மிசையேறி' கன்னமா நகரினின்றும் நீங்கினர். மின்னிறக் கொடி மென் மருங்குலார் மருங்கு மிடைந்து வெண்சாமரம் இரட்ட, அல்நிறப்பொழில்சூழ் கன்னமாபுரியின் அரணேயும் அகழியையும் கடந்து, செழும்புனல் மிக்க தண்ணிய மருத நிலத்தை அணுகினர். அங்கே 'கோடுவார் மலர்ப் பொழிலேயும், குளிர் தடத்தினேயும், நீடுவார் சிறைப் பறைவையின் குழாத்தையும், நிறைநீர் ஆடுவாரையும். அவ்விடத்து அணிமலர் கொய்து சூடுவாரையும்' சந்திரமதிக்கு அரிச்சந்திரன் காட்டினன்.

அவ்வளமார் சோலேயில் ஆடவரும் மகளிரும் இனிமையாக ஆடி மகிழும் காட்சியையும், இயற்கையழகின் மாட்சியையும் தன் காதல் மனேவிக்கு இனிய மொழியோவியமாக விளக்கிக்காட்டுகிருன் அரிச்சந்திரன். இலக்கியச் செறிவும், கற்பனே வளமும், தமிழெழிலும், கவிதையாற்றலும் அமைந்த இருபது பாக்களால் வீரகவிஞர் இத்'தேன் நிலவு'க் காட்சியை விளக்குகிருர். பெரும்பான்மையான உவமைகளே ஆண்டுள்ளார். அரிச்சந்திரன் கூறுவதைக் கேட்போம்.

''திருவே, செழிப்பு மிகுந்த இப்பூஞ்சோலே முழுதும் எத்துணே பூக்கள் சிரிக்கின்றன! அம்மலர்களே மொய்க்கின்றன அழகிய வண்டுகள், அவை பூந்தேனே உண்ணுமல் காத்துக்கொண்டிருக்கின்றன. யாருக்காக? ஆண் வண்டுகள் வருகைக்காகத்தான்! ஆண் வண்டுகள் உணவுஉண்ட பிறகுதான் பெண்வண்டுகள்

உணவு உட்கொள்ளும்! நாட்டுமரபை மக்கள் மட்டும்மல்ல சிற்று யிரிகளும் போற்றிக்கடைப் பிடிக்கின்றன! பெண்வண்டுகள் உவகையோடு எதிர்நோக்குகின்றன. இக்காட்சி எப்படி இருக்கிறது தெரியுமா? நம் நாட்டிலுள்ள பெண்டிர் உணவைச் சமைத்து வைத்து, வெளியே பணிசெய்யச்சென்ற கணவர் வருகைக்காக ஆவலோடு எதிர்பார்த்து காத்திருப்பதைப்போல இருக்கிறதல்லவா?''-எப்படி அரிச்சந்திரன் சொற்றிறன்? வீரகவிஞரின் கலைப்பண்புள்ளத்தின் அழகு புலனுகிறதல்லவா?

"செய்ய மா மலர் அடுத்தும் ஒண் பெடைகள் தேன் அருந்தாப்
பையவே சுரும்பு அடை வழி பார்த்து இனிது உறலால்
தையலார் உணவு அமைத்து அன்பர் தாம் வர நோக்கம்
செய்யும் நாள் ஒத்த செழுமலர்க் காவெலாம் திருவே."
(வீ. கா :262)

தமிழக மகளிர் பண்பாட்டையும், சீரிய வாழ்க்கை ஒழுக்க நாகரிகத்தையும் மிக நுண்மையாகப் பாட்டில் ஆண்டு அரிய பணிசெய்துள்ளார் வீரகவிஞர்.தமிழ்ப் பெண்கள் பேரருள் உள்ளம் உடையவர்கள்; தன்னலமற்றவர்கள்; தம் ஆருயிர்க்கணவர் நலனே தம் நலன் எனக்கருதி வாழ்பவர்கள். அதனுல்தான் உணவு சமைத்துமுடிந்தவுடனே உண்ணுமல் எவ்வளவு பொழுதானுலும் காத்திருந்து, கணவர் வந்தபின்பு அவர் உண்டு முடித்தபிறகே தாம் உண்பர். வீரகவிஞர் நாட்டுப் பண்பாட்டை -வீட்டுப் பண்பாட்டை-பாட்டுக்குரிய பண்பாடாக ஆக்கிய அழகு, சுவையும் பயனும் வாய்ந்ததாகும்.

இனிமையும் இன்பமும் துள்ளும் உள்ளமுடையோர்க்கு உலகமெல்லாம் இனிமையாகவும் இன்பமாகவுமே தோன்றும். அரசஇன்பவாழ்வில் திளைக்கும் அரிச்சந்திரன் எளிய இயற்கைக்

காட்சிகளிலும் ஆரவார இன்பக்காட்சியையே காண்கிறன்.

"நல்லகுடியில் பிறந்தவளே, வண்டு எப்போதும் மலர்களிடம் பயில்வதால் அவற்றின் உடலிலும் மணம் வீசும். அத்தகு வண்டுகள் இசைப்பாடினியரைப்போல இசைபாடுகின்றன. அழகிய மயில்கள் சோலேயில் ஒருபுறத்தே ஆடலரசிகளைப்போல அழகாக ஆடுகின்றன. தென்றல்காற்று விசிறியால் விசிறுவதைப் போலஅலையலையாகவீசுகிறது. இனியஅருவிகளின் அலைஎழுப்பும் ஓசை, ஆடரங்குக்கேற்பஒலிக்கும் மத்தளஓசைபோல்ஒலிக்கிறது. பக்கலில் நீண்டோங்கிநிற்கும் கமுகமரங்கள் (பாக்கு) வெற்றிலை போடுவதற்கு ஏற்ற பாக்குக்களை சிறப்போடு எதிரே நீட்டுகிறது. கொன்றைமரங்கள் வள்ளல்களைப்போல ஆடல்-இசைக்கலையைக்கண்டு சுவைத்து மகிழ்வனபோலத் தலையையசைத்து, ஆடிப்பாடும் கலைஞர்கட்குப் பொற்காசுகளைக் கைநிறைய வாரிச் சொரிவதைப்போலக், கொன்றைப்பூக்களைச் சொரிகின்ற இயற்கைக் கலையழகை நீ பார்" என அரிச்சந்திரன் காட்டுகிறன் தன் துணைவிக்கு.

"மல்றல் வண்டு இசைபாட, மாமயில் நட மாடத்
தென்றல் வந்து கலைந்து அலைபல முழவுஒலி செய்ய,
நின்ற பூகங்கள் இலை பழுக்காய் எதிர் நீட்டக்
கொன்றை பொன் சொரி வளமை பாராய்
குலக்கொடியே!" (வி. கா: 265)

இப் பாடலின் கற்பனைநயம் அகநானூற்றுள் 'ஆடமைக் குயின்ற அவிர்துளைமருங்கில்' எனத்துவங்கும் பாவிலும், மணிமேகலை-பளிக்கறை புக்ககாதையின் கம்பன்காதையிலும் ஈண்டுசுட்டப் பட்டவாறே இசை-ஆடல் அரங்காக இயற்கை நிகழ்ச்சியை நனிபுலமை நலஞ்சிறக்கப் பாடப்பட்ட அழகினை ஒப்புநோக்கிக் கற்றின்புறவேண்டும்.

'அச் சோலையிலுள்ள பொய்கையில் அளவற்ற தாமரை மலர்கள் பூத்துள்ளன. மிகப்பல அன்னங்கள் இரை தின்னக்

கூடிப் பறந்து நிறைந்துள்ளன. ஓர் அன்னம்மட்டும் எழுந்து குதித்தாடியது. அக்காட்சியைச் சந்திரமதிக்குக்காட்டிய மன்னன்; மிகவும் நீளமான மூங்கிலின்மேலேஏறி மக்கள் திரண்டிருக்கும் அவையின் நடுவில் கழைத்கூத்தாட்டம் ஆடுகிற கழைக் கூத்தியைப்போல மலர்மீதிருந்து குதிக்கும் தனியன்னத்தின் காட்சி இருப்பதைப்பார்' என விளக்குகிருன்.

"கூடும் அன்னங்கள் பறந்து இரை கவர்ந்திட
குழாத்தில்
ஊடும் அன்னம் ஒன்று உயர்ந்த தாமரை மிசை உகள
நீடுவார் கழைஏறியே நிறை அவை நடு நின்று
ஆடும் 'வேழம்ப மாதரை' நிகர்த்தல் பார்! அணங்கே!"
(வி. கா: 270)

கழைக் கூத்தியரை நம் வீரகவிஞர் 'வேழம்ப மாதர்' எனக்குறிப்பது கருதத்தக்கது.

காதலில் ஆண்மையின் துடிப்புக்கு ஒரு தனிச் சிறப்பும், மதிப்பும் உண்டு. பெண்மையை வலிமையின் ஆற்றலால் கவர்ந்து, அடக்கி இன்பம் துய்ப்பது ஆண்மைக்குப் பெருமை நல்கும்! இவ்வரிய அகப்பொருள் நுண் உண்மையை ஆசரியர் வீரகவிஞர் அழகாக நிலைநாட்டுகிருர்.

"இளமை நலம் அமைந்த பூங்கொடி போன்றவளே, அதோபார். நல்ல பொய்கையில் பூத்திருக்கும் தாமரைப்பூவில் வண்டானது நெருங்கி மொய்த்துத் தேனைப் பருகுகிறது. அக்காட்சி எப்படியிருக்கிறது? தன்பால் ஊடல்கொண்டு பிணங்கி ஒதுங்கி-நிற்கும் காதலியைத் தன் ஆண்மையாற்றல் முனைந்து தோன்றவன்போடு-வலியப்-பற்றி இழுத்துக் காதலன் அவளின் தெவிட்டாத செவ்விதழில் அரிய அமிழ்தத்தை அள்ளிப்பருகி அளவற்ற இன்பத்தை அடைந்து மென்மையான பஞ்சணையில்

அமைந்திருப்பதைப்போலிருக்கிறதல்லவா? பார்'' என்ருன் அரிச்சந்திரன்.

"நான் புலல் பதுமம் துதைந்து அளி நறவு உணலால்
வண்பினில் பிடித்து ஊடிய மகளிரை மஞளர்
அன்புறத் தெவிட்டா இதழ்ஆர் அமுது அருந்தும்
இன்ப மெல்லணே யொப்பன இளங்கொடி! காணுய்!"
(வி. கா: 271)

''இன்ெனுரு காட்சி. குளத்தில் அழகோவியமான இள நங்கையொருத்தி குளிக்கிருள். அருகில் இருந்த தாமரை மொட் டொன்றைப் பறித்தாள். ஒளிவீசும் அழகான நெற்றியையுடைய அப்பெண் தாமரைப்பூவைக் கையால் வலிய மலரச் செய்தாள் பிறகு தன் கையை அப் பூவின்மீதுவைத்துத் தடவினுள். அது எப்படியிருக்கிறது தெரியுமா? 'தாமரைப்பூவே, என் முகத்தின் பேரழகைப்பார்த்து அம் முகஅழகு உனக்கில்லையென்றெண்ணிக் கண்ணீர் துளும்புகிருய். அவ்வாறு துன்புருமல் அமைதியாக இரு. அஞ்சாதே!'' எனக் கூறுவதற்காகத் தன் கையால் தடவி ஆறுதல் செய்வதுபோல் இருக்கிறதல்லவா?''

"மஞ்சனம் குடைந்து ஆடிஓர் வாள்நுதல் மடந்தை
கஞ்ச நன் மலர்க்கடைந்து அதன்மிசைக் கரம் வைத்தல்
சஞ்சலந் தவிர்! என்முகந் தனைக் கண்டு துளும்பாது
அஞ்சல்!'' என்று அமைப்பது நிகர்த்தல் பார் அணங்கே". (276)

கவிஞர்கள் உள்ளம் அருளும் அன்பும் பொங்கித் தளும் பும் இரக்கப் பொய்கையாகும். அவ்வுண்மையை இப்பாட்டால் அறியலாம்.

'ஒரு பெண்ணுக்கிருக்கும் அழகு தனக்கு இல்லையே!'

எனத் தாமரை துன்புறுவதையும் அத்துன்பத்துக்கும் ஆறுதல் செய்து ஆற்றுவிக்க விழையும் கனிவும் இரக்கமும் வாய்ந்த காரிகையின் ஓவியத்தையும் கற்பனைவளத்தோடு காட்டிப் புலமை உள்ளத்தின் பேரிரக்கஇயல்பை நுட்பமாகப் புலப்படுத்தியுள் ளார் வீரகவிஞர்.

அரிச்சந்திரன், ''மின்னல்போல அழகொளிவீசும் பெண்ணே, இப் பூஞ்சோலையில் மிகப் பெரிதாக வளர்ந்து அடர்ந் திருக்கும் மர வரிசையால் இருண்ட நிழல்பரவியிருப்பதைப்பார். அவ்விருள்நிலைப் பின்னணியாகக்கொண்ட சூழலில் ஒரு பெண் எழிலோடு நடந்துவருவதைப்பார். அழகிய வண்டுகள் அவள் கொண்டையை மொய்க்கின்றன. அவள் கூந்தலிலுள்ள நறுமலர் தான் வண்டுகளைக் கவர்ந்தவை. அம்மலர்கள் கரிய சூழ்நிலையில் ஒளியோடு மிளிர்வது எப்படியிருக்கிறது? வானமெங்கும் பரவிக் கொண்டிருக்கும் குளிர்ச்சிவாய்ந்த கரியமுகிலின் இடையிடையே விண்மீன்கள் ஒளிவீசி மிளிர்வதை ஒத்திருக்கிறதைப் பார்!'' என்கிறான். இதோ அப் பாட்டோவியம்:

"கான் நிரைப் பெரு நீழலின் வரும் ஒரு கன்னி
தேன் நிரைத்த மென் சிகழிகை நறுமலர் தெரிவ
வான் நிரைத்த தண்கரு முகில் இடையுடை வயங்கி
மீன் நிரைத்தன ஒப்பன காண்டியால்! மின்னே!"

(வி. கா: 277)

''குளத்தின் ஒருபக்கம் அழகான நெற்றியை உடைய ஓர் எழிலரசியோடு ஓர் ஆடவன் நீராடல்செய்வதைப்பார். அவ் வாடவனின் அருமை மனைவி கரையில் நின்றுகொண்டு தன் கணவனின் காமக்குறும்பைக்கண்டு உள்ளம் கொதித்துச் சீற்ற முற்று, வெண்மையான பற்களினால் சிவந்த உதடுகளைக் கடித் துக், கூர்விழிகள் சிவந்திடச் சினப்பதைப்பார். உள்ளச் சீற்றத் தோடு உவந்துநோக்கும் மனைவியின் பார்வையைக்கண்டு அக் கணவன் குற்றவாளிபோலத் 'திருதிரு'வென விழிப்பதைப்பார்.

மனைவியை மன்னிக்குமாறு கெஞ்சி இரந்துநோக்கும் அந்த ஆடவனின் நோக்கும் தோற்றமும் நகைச்சுவையை உண்டாக்குகிறதல்லவா? அவன் பார்வையின் அவலநோக்கைப்பார். 'அட்டா! தன் செயலை மனைவி பார்த்துவிட்டாளே!' என அவன் தவிதவிப்படைந்து கள்வனைக விழிப்பது கழிவிரக்கம் ஊட்டவில்லை?' என அரிச்சந்திரன் சந்திரமதிக்குக் காட்டிய காட்சியை,

"நறுமலர்க் குழலாய்! நன்னுத லோடுந்
துறுமலர்த் தடம் ஆடும் தன் தோன்றலை ஒருத்தி
முறுவலால் இதழ் அதுக்கியே முனைவிழி சிவக்கக்
கறுவி நோக்கிய நோக்கமும், நோக்கும் நீகாணுய்!"
(வி. கா: 280)

என வீரகவிஞர் அழகாக விளக்குகிருர்.

'இன்ன தன்மையயாவையுங்கண்டு கண்டு ஏகி மின்னு மன்னனும் கலவியும் புலவியும் விளைத்துச்' சோலையைக் கடந்து செல்லும் காட்சியின் மாட்சி இலக்கியத் தேன் நிலவுக் காட்சியன்ரே!

காதல் வாழ்வில் 'தேன் நிலவு, வாழ்வு எத்துணை சுவை பயக்குமோ; அத்துணைச் சுவையை 'இலக்கியத் தேன் நிலவு' வாழ்விலும் கண்டோம்.

* தமிழ்ப் புலவர்கள் மக்கள் வாழ்க்கையைக் கூர்ந்து

---

* அகப்பொருள் விளக்கத்தில் 'நாற்கவிராச நம்பி' அவர்களும் இவ்வின்ப வாழ்வினை இலக்கணமாக்குவார்:

" . . . . . . நீக்கிப்
புறநகர்க் கணவனேடு போகிச் செறிமலர்ச்
சோலையுங் காவு மாலையங் கழனியும்
மாலைவெள்ளருவியு மலையுங் கானமும்
கண்டு விளையாடலுங் கடும் புனல் யாறும்
வண்டிமிர் கமல வாவியுங் குளனும்
ஆடி விளையாடலுங் கூடுங் கிழத்திக்கு".
( அகப்பொருள் – அகத்திணை -94 நூற்பா. )

நோக்கி, வாழ்விலக்கியம் படைத்த நுண்மையையும் இதனுல் அறியலாம்.

வீரகவிஞர் தமிழ்மரபை நனிபோற்றி இலக்கியம் படைத்துத் தமிழர் வாழ்வியல் செழிக்க உதவிய தொண்டுள்ளம் போற்றற் குரியதாம்.

உவமைகளின் வளத்தில் ஈடிணையற்ற மொழி தமிழ். தமிழப் புலவர்கள் உவமையை ஆள்வதில் உலகக் கலைஞர்களை வெல்லும் ஆற்றல் சான்ற வல்லுநர்களாவர். வீரகவிஞர் இயற்கையின் நிகழ்ச்சிகளுக்கு, வாழ்வின் சிறு நிகழ்ச்சிகளை உவமையாக்கி, நல்ல சுவைபயக்கச்செய்திருக்கும் புலமைவளம் நினைந்து நினைந்து இன்புறுதற்குரியது.

முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணு தரற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின் ருரே.

—திருமந்திரம்

# எழுபிறப்பு.

## சாமி பழனியப்பன்,

—*—

“எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.”

என்ற குறட்பா ‘‘செய்ந்நன்றி அறிதல்’’ என்ற அதிகாரத் தலைப் பின்கீழ் வருகிறது. இக்குறட்பாவுக்கு உரை எழுதப் புகுந்த பரிமேலழகர்,

‘‘தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, எழுமையினையுடைய தம் ஏழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்.’’ என்று குறித்தார்.

மேலும், ‘‘எழுமை என்றது வினைப்பயன்’’ தொடரும் ஏழு பிறப்பினை; அது வளையாபதியுட் கண்டது. எழுவகைப் பிறப்பு, மேலே உரைத்ததாம். விரைவு தோன்றத் துடைத்தவர் என்றார் என்று விரிவுரை சொல்லிக்கொண்டு செல்கிறார்.

“ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானுடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச் —சீரிய
பந்தமாந் தேவர் பதினா லயன்படைத்த
சுந்தமில்சீர்த் தாவரநா லைந்து.”

என்பதே பரிமேலழகர் எடுத்துக்காட்டும் வளையாபதிச் செய்யுள்.

‘‘தங்கள் உற்ற துன்பத்தை நீக்கினவரது நன்பை அப்

பிறப்பிலேயன்றி, எழுமையிலுந் தோற்றும் பிறப்பெல்லாம் நினைப்பர் சான்றோர் என்றவாறு.''

என்கிறார் மணக்குடவர். இந்தக் கருத்தை அடியொற்றியே பலரும் உரை வகுத்துள்ளனர்.

திருக்குறளில், ''ஏழு பிறப்பு'' என்னும் சொல் 62, 107 ஆகிய இரு குறட்பாக்களிலும், எழுமை என்னும் சொல் 126, 398, 538, 835 ஆகிய குறட்பாக்களிலும் இடம் பெற்றுள்ளன. இந்த எழுமை, ஏழுபிறப்பு என்ற சொற்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஏழ்வகைப் பிறப்பில் வள்ளுவர்க்கு உறுதியுண்டு என்று வலியுறுத்த முனைவது சரியல்ல, அறிவுக்குப் பொருந்துவதுமல்ல.

"விந்து நாதமடி —— அகப்பேய்
மெய்யாக வந்ததடி
ஐந்து பெரும்பூதம் —— அகப்பேய்
அதனிட மானதடி".

என்றார் அகப்பேய்ச் சித்தர். விந்தும் நாதமும் - இணைந்து கரு உண்டாகிறது. அது உடலாக – மெய்யாக வளர்கிறது. நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐந்து பூதங்களும் இணைந்து ''நாத விந்தால்'' ஆன உடம்பினுள்ளே உயிராக இருந்து அவ்வுடம்பை இயக்குகிறது. அதன்பின் உயிர் வெளியேறியதும் உடம்பு இயக்கமழிந்துவிடுகிறது. அதுமட்டுமல்ல. உடம்பே எரிக்கப்பட்டோ, புதைக்கப்பட்டோ அழிக்கப்படுகிறது. வெளியேறிய ஐம் பூதங்களாலான உயிரின் நிலை என்ன? அது அப்படியே வேறொரு உடம்பிலே புகுந்து ''பிறவி'' எடுக்கிறதா?

குளத்திலிருந்து ஒரு குடம் நீர் கொண்டுவருகிறோம். அக்குடநீரை மீண்டும் குளத்திலே கொண்டுபோய்க் கொட்டிவிடுகிறோம். அதன்பின், நாம் கொண்டுபோய்க் கொட்டிய அதே ''குடத்துநீரை'' மொள்ள முடியுமா?

அதைப்போலவே, உடம்பிலிருந்து வெளியேறிய உயிரும் உலகில் தனித்து உலவுவதும் இல்லை; அப்படியே வேறொரு உடம்பில் சென்று நுழைந்து கொள்ளுவதுமில்லை. நிலக்கரியிலிருந்து வைரம் தயார்செய்யப்படுகிறது. அவ் வைரம், எரிக்கப்பட்டால் அது மீண்டும் கரியாகிப் போய்விடுகிறது. அது, வைரம் என்ற பெயரையும் இழந்துவிடுகிறது. அப்படியேதான், உடம்பிலிருந்து வெளியேறிய உயிராகிய ஐந்து பூதங்களும், வெளியே நம்மைச் சூழ்ந்துள்ள ஐந்து பூதங்களோடு கலந்துவிடுகின்றன. இதுதான் அறிவியல் உண்மை. அவ்வாறிருக்க மறுபிறப்பு, எழு பிறப்பு என்பனவெல்லாம் எதைக் குறிப்பன?

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்"

"உடம்பை வளர்க்கும் உபாயமறிந்தேன்
உடம்யை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே".

என்றார் திருமூலர்.

"கறந்தபால் முலைப்புகா
கடைந்தவெண்ணெ மோர்புகா
உடைந்துபோன சங்கினோசை
உயிர்களும் உடற்புகா
விரிந்தபூ உதிர்ந்தகாயும்
மீண்டும்போய் மரம்புகா
இறந்தவர் பிறத்தலென்ப
தில்லை இல்லை இல்லையே!"

என்றார் சிவவாக்கியர்.

இறந்தவர்க்கு இங்கு வழங்கப்பெறும் திதி, திவசம் முதலியவற்றைப்பற்றிப் பேசப்படுகிறது.

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை".

என்ற குறட்பாவுக்கு உரையெடுத்தெழுதப்புகுந்த

பரிமேலழகர், ''இறந்தார்க்கு நீர்க்கடன் முதலியனசெய்து நல்லுலகின்கட் செலுத்தானும்'' என்று சிறப்புரை வழங்குகிறார்.

இது, ஒருவன் இறந்தபின் அவன் ஆவி தனித்துநின்று தயங்கிக்கொண்டிருப்பதுபோலவும், நீர்க்கடன் முதலியன செய்து அதைச் செலுத்தவேண்டிய இடத்திற்குக் கொண்டு செலுத்துவதுபோலவும் பொருள்படுவதாகவே காண்கிறது.

''பார்ப்பன மாந்தர்காள்
பகர்வது கேண்மின்
இறந்தவ ராயுமை
யில்விடை யிருத்திப்
பாவனை மந்திரம்
பலபட வுரைத்தே
உமக்கவர் புத்திரர்
ஊட்டின போல
அடுபசி யாற்குலைந்
தாங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது
கண்டதார் புகலீர்!
அருந்திய உண்டியால்
யார்பசி அழிந்தது?

என்று கேட்கிறார் கபிலர். இவ்வாறு திருமூலரும், சிவவாக்கியரும், கபிலரும் இன்னோரன்ன பிற புலவர்பெருமக்களும் பேசுகின்றனர். வள்ளுவர் தவறுசெய்திருக்கிறாரா? இப்புலவர்கள்தாம்தவறு செய்கிறார்களா? நன்றாக ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

மறுபிறப்பையும், ஏழுபிறப்புக்களையும் வற்புறுத்துவது சமயக் கருத்தேதவிர, தனிப்பெரும்புலவரான வள்ளுவர் கருத்தாகக் கொள்ளுவதற்கில்லை.

எனவே, ஏழ் என்பதை எண்ணுப் பொருளிற் கொண்டு, பிறப்பு பிறவி என்பனவற்றைத் தலைமுறையாகவே கருதல் வேண்டும்.

எனக்குத்தெரிந்த ஒரு பெரியவர் வயதிலும், அறிவிலும் வளர்ந்தவர்தான். அவர் தந்தையார் பெருங்கடனுளியாகிவிட்டாராம். அவர்கட்க்கு அப்போது இருந்தது ஒருசின்னஞ்சிறு வீடேயாகும்.

கடன் கொடுத்திருந்த முதியவர் கடனை வசூலிக்க வந்திருந்தாராம்; கடன்பட்டிருப்பவர் தன் நிலையைத் தெளிவாக எடுத்துவிளக்கி, எப்படியேனும் கடனுக்கு விரைவில் ஏற்பாடு செய்துவிடுவதாகவும், சற்று மனமிரங்கிப் பொறுத்துக்கொள்ளும்படியும் வேண்டிக்கொண்டாராம்.

சில நாட்களிலேயே, கடன்பட்டவர் திடீரென்று இறந்துவிட்டாராம். கடன் கொடுத்தவர் பதறிப்போய் வீட்டை ஜப்தி செய்யப்போவதாகச் சொன்னாராம். அப்போது சிறுபிள்ளையாக இருந்த என் நண்பர் அவரிடம் சென்று கண்ணும் கருத்தும் கலங்கி, ''ஐயா! தயவுசெய்து கொஞ்சநாள் பொறுத்துக்கொள்ளுங்கள், விரைவில் உங்கள் கடனைத் தீர்த்துவிடுகிறேன். நீங்கள்தான் இப்போது காப்பாற்றவேண்டும் என்று கெஞ்சினாராம். மனம் இரங்கியது. மனித உள்ளந்தானே!

விரைவில் கடனும் தீர்க்கப்பட்டது. அது நடந்து பல ஆண்டுகளாயின. எனினும் இன்னும், என் நண்பர் அந்த மனிதரின் பெருந்தன்மையை வாயாரப்பேசிப் புகழ்கிறார். பெரியவரான என் நண்பரின் பிள்ளைகளும் அந்த உதவியாளரின் பெருமையைப் பாராட்டுவதை நான் கேட்டிருக்கிறேன்.

ஒருசமயம், ஏற்பட்ட துன்பத்தை நீக்கியவரின் அந்தச் செயலை —— நாட்டை என் நண்பரும் அவரது பிள்ளைகளும்

இன்னும் பாராட்டுகின்றனர்.

''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கள்
விழுமந் துடைத்தவர் நட்பு''.

என்பது இதுதான். எனவே, எழுபிறப்பு என்று பொருள் கொள்ளாமல், பல தலைமுறை என்று பொருள்கொள்வதே பொருத்தமானதாகும். சான்றோர் ஒருவரால் அவர் தந்தையும், சான்றோரின் மக்களும் போற்றப்படுவதில்லையா? ஆதலின், வள்ளுவருக்கு ஏழுபிறப்பிலும், மறுபிறப்பிலும் நம்பிக்கை உண்டென்று பேசாமல், ஏழு என்ற சொல்லை எண்ணுப் பொருளிற் கொண்டு, ''பல தலைமுறை'' என்று பொருள் காண்பதே வள்ளுவர் உள்ளத்திற்கு இயந்ததாகும்.

மெய்த்தவத் தானை விரும்பும் ஒருவர்க்குக்
கைத்தலஞ் சேர்தரு நெல்லிக் கனியொக்குஞ்
சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற தேவர்கள்
அத்தனை நாடி அமைந்தொழிந் தேனே.

—திருமந்திரம்

# "மொழி"

## எஸ். கிருஷ்ணஸ்வாமி M. A. (Columbia)

—*—

மனிதன் உயிரினங்களிடையே உயர்ந்தவனாய் வாழ்வதற்கு முதன்மையான காரணம் அவன் வளர்த்துள்ள மொழிகள் மனிதன் மொழியை வளர்த்தான். மொழி அவனை வளரச்செய்தது. ஆதி மனிதன் எவ்விதம் மொழிபேச ஆரம்பித்தான், மொழி எவ்விதம் உருவடைந்தது என்ற கேள்விகளுக்கு ஆராய்ச்சியாளர்கள் பல கருத்துகளை தெரிவிக்கிறார்கள். தீர்மானமான விடையொன்றும் கூறவில்லை.

மொழி எவ்விதம் உண்டானாலும், மொழியினூடே மனிதன் அறிவு வளர்ந்தது. புறத்தையும், அகத்தையும் ஆராய உதவியது மொழி. கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றை வளர்த்தது மொழி. இலக்கியம், கலை ஆகியவற்றிற்கு அடித்தளமாயிற்று மொழி. ஏனெனில் மொழியின்றி நம்மால் வசிக்கமுடியாது சிந்தனையின்றி எந்தவித வளர்ச்சியும் பெறமுடியாது. ஆகவே மனித கலாச்சாரத்தின் அடிப்படையாக விளங்குவது மொழி. மனிதன் மொழியினூடே தன் கலாச்சாரத்தை தன் சந்ததிகளுக்கு அளிக்கிறான்.

உலகில் பல பாகங்களில் பல மொழிகள் தோன்றி அந்தந்த பிரதேச வளமைக்கும், நேரத்திற்கும் மக்கள் எண்ணங்களுக்கும் தக்கவாறு மாறுபட்டு வளர்ந்திருக்கின்றன.

எஸ்கிமோ மொழியில் "தேங்காய்", "பாலைவனம்" போன்றவைகளுக்கு வார்த்தையேயில்லை. ஏனெனில் பனி நிறைந்த அவர்கள் பிரதேசத்திற்கும் இவைகளுக்கும் சம்பந்தமே

யில்லை. பசிபிக் சமுத்திரத்திலுள்ள ஒரு தீவில் பேசப்படும் ''சமோவா'' மொழியில் 'பனி'' என்பதற்கு வார்த்தையில்லை. வேடிக்கை என்னவெனில் எஸ்கிமோ மொழியிலும் ''பனி'' என்ற சொல்லுக்கு நேர் மொழிபெயர்ப்பு இல்லை. காரணம் அவர்கள் வாழ்க்கையில் ஒரே வார்த்தையோடு தள்ளிவிடக் கூடியதல்ல பனி. சிலமணிநேரங்களுக்கு முன்னால் விழுந்த பனியைக்குறிக்க ஒரு சொல், நேற்று விழுந்த பனியைக்குறிக்க வேறொருசொல், இறுகி கண்ணாடிபோல் காணப்படும் பனிக்கு ஒரு சொல், மணல்போலுள்ள பனிக்கு மற்றொருசொல், ஆக பனியைக்குறிக்க பல சொற்கள் இருக்கின்றன எஸ்கிமோ மொழியில்.

மொழி இவ்விதம் இடம் காலம் ஆகியவற்றிற்கு தகுந்தவாறு உருவாகிறது. அதுமட்டுமன்று, அந்தந்த பிரதேச மனிதனுடைய கலாச்சாரத்தையும், அவனுடைய உலக நோக்கையும் பொருத்து சொற்களும், சொற்கோர்வைகளும் உண்டாகின்றன.

''எனக்கு உடல்நலமில்லை'' என்பதை ஆங்கிலத்தில் கூறும்போது '' I am unwell '' அதாவது ''நான் சரியில்லை'' என்று கூறுகிறோம். தமிழனுடைய எண்ணத்தில் உடல்நலமில்லையென்றால்தானே சரியில்லை என்று பொருளல்ல. அவனுக்கு'நான்' வேறு, ''என் உடல்'' வேறு. இந்த அடிப்படை கலாச்சார வேறுபாடு சாதாரண தினசரி மொழியிலும் காணப்படுகிறது.

''நாவஹோ'' மொழியில் ''அவன் இறக்கிறான்'' என்பதற்குப்பதில், ''அவனிடம் சாக்காடு நடந்துகொண்டிருக்கிறது'' என்றே கூறுவர். ''நான் மேஜையை நகர்த்துகிறேன்'' என்பதற்கு ''மேஜையை நகர்த்துவதற்கு நான் காரணமாயிருக்கிறேன்போலும்'' என்றுரைப்பர். ஆங்கிலத்திலும், இந்திய மொழிகளிலும் மனிதன் இயற்கையைக் கட்டுப்படுத்தி வாழ்பவனாக உலகை நோக்குகிறான். நாவஹோ முதலிய மொழிகளில் இயற்கையில் தானும் ஒரு பகுதியாக இயங்குபவனாக, பொருள்களுக்கு

உட்பட்டவனுக உலகை நோக்குகிருன். சுருங்கக்கூறின் மனிதனுடைய உலக நோக்கு அவன் மொழியிலே பிரதிபலிக்கிறது. இந்த அடிப்படையை மனதில்நிறுத்தி, இந்திய மொழிகளைக் காண்போம்.

சுமார் 5000 வருடங்களுக்குமுன், மொஹஞ்சோதரா, ஹாரப்பா ஆகிய இடங்களில் என்ன மொழி பேசப்பட்டது என்று திண்ணமாகக் கூறமுடியாதாயினும், அது ஒருவகை திராவிட மொழியாக இருந்திருக்கக்கூடுமென்று தெரிகிறது. இந்த மொழி நாளடைவில் பல மாற்றங்களுக்குட்பட்டிருக்கவேண்டும். நமக்கு அதிகமாகத் தெரிந்த வேதகாலமுதல் இந்திய மொழி வரலாற்றை கண்டோமானுல், ரிக்வேதம் சுமார் 4000 ஆண்டுகளுக்குமுன் சம்ஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டது. அந்த பழமையானகாலத்தில் சிந்து, கங்கைநதி பிரதேசங்களில் சிலவகை பிரக்ருத் மொழிகள் பேசப்பட்டன. இவை முக்கியமாக ‘இந்தோ–ஐரேப்பிய மொழி’ இனத்தைச் சேர்ந்தவை. லாட்டின் க்ரீக், ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளும் இந்த இனத்தைச் சோர்ந்தவையேயாகும். பிரக்ருத் மொழிகளுக்கு இலக்கியமில்லை. பல வேறுபட்ட சொற்களோடு இவை வழங்கிவந்தன. சமஸ்கிருத மொழியில் இலக்கியங்கள் தோன்றலாயின. பல பிரதேச பிரக்ருத் மொழிகளும் சமஸ்கிருத சொற்களை தழுவலாயின. பாலி, அபப்ரம்ஸா மொழிகளும் இவற்ருேடு கலந்து வட இந்தியாவின் பல்வேறு பாகங்களிலும், பல்வேறு மொழிகளாக உருவாயின. இதற்குள் தென்னிந்தியாவில் திராவிட மொழிகளும் நாளடைவில் மாறுபட்டு சொல் அமைப்புகளையும் இலக்கணங்களையும் வகுத்துக்கொண்டன. இவற்றுள் முதன்மையானது தமிழ்மொழியாகும். தமிழ்ச்சங்க இலக்கியங்கள் கிறிஸ்து பிறந்த நூற்ருண்டில் உருப்பெற்றனவென்று பலர் கருதுகிருர்கள்.

சமஸ்கிருதமொழி நாடெங்கும் செல்வாக்கடையவே, ஒவ்வொரு பிரதேசத்திலுள்ள சிறு மொழிகளும் அம்மொழியைத்

தழுவிநிற்கலாயின. இங்ஙனம் சுமார் 8-ம் நூற்றுண்டில் கன்னடம், 11,12-ம் நூற்றுண்டுகளில் வடக்கே வங்காளம், மராத்தி, தெற்கே தெலுங்கு; 13,14-ம் நூற்றுண்டுகளில் காஷ்மீரி அஸ்ஸாமி, குஜராத்தி, ('குஜராத்தி' என்னும் பெயர் இம் மொழிக்கு 17-ம் நூற்றுண்டில் வழங்கலாயிற்று) ஆகிய மொழிகளும், 14,15-ம் நூற்றுண்டுகளில் வடக்கே ஒரியா, பஞ்சாபி, தெற்கே மலையாளம் ஆகிய மொழிகளும் இலக்கியமொழிகளாக உருவாயின.

இப்பல்வேறு மொழிகளும் சமயநூல்களினுலேயே இவற்றின் இலக்கியங்களை பெறலாயின. இவை சைவ, வைணவ, சமண மத இலக்கியங்களாகும். இப் பல்வேறு மொழிப்பகுதிகளிலும், பிரதேச மொழியிலும், சமஸ்கிருத மொழியிலும் தேர்ச்சி பெற்ற கலைஞர்களும், எழுத்தாளர்களும் வாழ்ந்தனர். ஒருபிரதேசத்திலிருந்து மற்ற பிரதேசங்களோடு தொடர்புகொள்ள சமஸ்கிருத மொழி வழங்கியது. இவ்விதம் தென் தேசத்தில் 'காலடி' என்னும் கிராமத்தில் தோன்றிய சங்கரர் அகில இந்தியாவிலும் தன் எண்ணங்களை பரவச்செய்ய வடமொழியில் இலக்கியங்கள் இயற்றினர். மத்திய இந்தியாவைப் பொருத்தமட்டில், சமஸ்கிருத மொழியொன்றே இலக்கிய மொழியாகத் திகழ்ந்தது. அரசவை மொழியாகவும் இருந்தது. பிரதேச மொழியாக எந்தமொழியும், இலக்கியத்தோடு உருப்பெறவில்லை. பல பிரக்ருத் மொழிகளைத் தாய்மொழியாக, எழுத்தில்லாத பேசும் மொழியாக இம்மக்கள் பேசிவந்தனர்.

முகலாயர்கள் டில்லி ஆட்சியைக் கைப்பற்றியபிறகு 16, 17-ம் நூற்றுண்டில் பர்ஷிய மொழி அரசவையில் புகுத்தப்பட்டது. ஆகவே இம்மொழியைப் பலர் பயிலத் தொடங்கினர். இந்த நிலையில்தான் மத்திய இந்தியாவில் புதிய மொழிக்குழப்பங்கள் ஆரம்பமாயின.

இன்றைய உத்திரபிரதேசம், மத்தியப்பிரதேசம், ராஜஸ்

தான், பீகார் ஆகிய ராஜ்யங்களில் தாய்மொழியாகப் பேசப்படும் முக்கிய மொழிகள்: காரிபோலி, பிரஜ்-பாகா, கனௌஜி, புண்டெலி, ராஜஸ்தானி, மார்வாரி, மாளவி, ஜெய்புரி, மெவாதி, பிலி, கோசலி, பீகாரி, மைதிலி, மகாஹி, போஜ்பூரி, ஸாதனி முதலியவையாகும். இவற்றில் ஒரிரண்டு மொழிகளில் ''துளசிதாஸ்'' போன்ற கவிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். இதைத் தவிர மற்றவர்கள் இலக்கியத்துறையில் இறங்கினால், சமஸ்கிருத மொழியிலோ, பர்ஷிய மொழியிலோ எழுதலாயினர்.

இப்பிரதேசபிரக்ருத்மொழிகள்பேசும் மக்களிடையேதொடர்பு அதிகரிக்கவே ஒருசில நூற்றாண்டுகளாக இப்பிரதேசத்தில் ஒரு வித''கடைத்தெருமொழி''வழங்கலாயிற்று. இம்மொழியில் சாதாரண தினசரி விஷயங்களைப்பற்றி இந்தப் பிரதேசத்தில் எந்த இடத்திலும் பேசினாலும் புரிந்துகொள்ளவார்கள். ஆனால் இம்மொழிக்கு இலக்கியமெதுவுமில்லை. இதற்கு ஹிந்துஸ்தானி என்று பெயர் வழங்கலாயிற்று.

19-ம் நூற்றாண்டில் ஹிந்துஸ்தானி, அல்லது ஹிந்தி என்று வழங்கிய இந்த கொச்சை மொழியை ஒரு இலக்கிய மொழியாக்க வேண்டுமென்று சில எழுத்தாளர்கள் நினைத்தனர். இம்மொழியில் இப்பிரதேசத்து மேற்கூறிய பிரக்ருத் மொழிச்சொற்கள், சமஸ்கிருத சொற்கள், பர்ஷியச் சொற்கள் ஆகியவன பலவும் கலந்திருந்தன. இதை ஒரு கலாச்சாரமொழியாக மாற்ற நினைத்தவர் சிலர் உயர் இலக்கியச்சொற்கள் பலவற்றையும் சமஸ்கிருதத்திலிருந்து தழுவலாயினர். வேறுசிலர் முக்கியமாக, முகமதியர்கள் இதே ஹிந்துஸ்தானி மொழியில் பர்ஷியன் சொற்களை அதிகமாக புகுத்தி எழுதத்தொடங்கினர். இவ்விதம் ஒரு அடிப்படைக் கதம்ப மொழிக்கு இரண்டு இலக்கியநடைகள் தோன்றி இன்றைய இந்தியாகவும், உருதுவாகவும் வழங்குகின்றன.

இன்றைய ஹிந்தி மொழியில் டில்லியைச் சுற்றி

பேசப்படும் காரிபோலிச்சொற்களே அதிகம். உயர் கலாச்சார சொற்களுக்கு சமஸ்கிருதமே துணையாகும். ஆகவேநம் நாட்டின் மிக இளமையானமொழி ஹிந்தி. பரதெந்து ஹரிச்சந்திரா (1850 -1883), மஹாவீரப்ரசாத் தீவிதேவி (1868–1938), முன்ஷிப் ரேம்சந்த் (1880-1936) ஆகிய ஆசிரியர்களின் இலக்கியங்களே இன்றைய ஹிந்திமொழியின் 'மிகப்பழமையான' இலக்கியங்களா கும், இலக்கியங்கள் எது எப்படியிருப்பினும் உத்திரப்பிரதேசம், மத்தியபிரதேசம், பீஹார், ராஜஸ்தான் ஆகியமாநிலங்களில் 15 கோடிமக்கள் ஹிந்தி பேசுகிறார்கள். இவர்களில்பலருக்கு காரி போலி, மைதிலி, மகாஹி முதலிய தாய்மொழிகள் இருக்கலாம். ஆனால் வீட்டுக்கு வெளியே இவர்கள் அனைவரும் ஹிந்திபேசுகிறார் கள். ஹிந்திக்கு அடுத்தபடியாக இந்தியாவில் அதிகமக்கள்பேசும் மொழி தெலுங்கு. இது 3 கோடி ஆந்திரர்களின் மொழியாகும்.

ஹிந்தியில் இலக்கியம்வளர ஆரம்பிப்பதற்கு முன்பே, கல்கத்தா முதலிய நகரங்களில் பலர் ஆங்கிலம்பயின்றனர். ராஜா ராம் மோஹன்ராய் போன்றவர்கள் மேல்நாட்டு இலக்கியங்களைப் பயிலத்தொடங்கினர். வங்காளிமொழி இலக்கியம் இதனால் வளர ஆரம்பித்தது. ஆங்கில எண்ணச்சாயல்கள் வங்காளி இலக்கியத் தில் தோன்றலாயின. நாளடைவில் மற்ற இந்திய மொழிகளிலும் இந்த ஆங்கிலச் சாயல் பரவியது.

சுமார் நூறுஆண்டுகளுக்கும் மேலாகவே நம் நாட்டின் மேதைகளனைவரும் ஆங்கிலத்தில் தம் கருத்துக்களை வெளியிட லாயினர். ஆங்கிலம் அகில இந்திய கலாசார இலக்கிய மொழி யாக மக்களை இணைத்ததோடுமட்டுமின்றி மேல்நாட்டு வளத்தை யும், இலக்கியங்களையும், விஞ்ஞான வளர்ச்சியையும், நாம் காண் பதற்கும், பயில்வதற்குமான ஆயுதமாக விளங்கலாயிற்று. இந்த மொழி வரலாற்றை மனதில் நிறுத்தி, இன்றைய மொழிப்பிரச் னையை காண்போம்.

இன்று நம் நாட்டில் பேசப்படாவிடினும் பல மொழிகளை வளர்த்த சமஸ்கிருதம் உலகின் ஒரு மாபெரும் இலக்கியமொழி

யாக உபநிஷத்துக்களையும் கீதையையும் மனிதனுக்கு அளித்த மொழியாக திகழ்கிறது. ஆயினும் இம்மொழியை நாம் என்ன முயற்சித்தாலும் இனி வீட்டுமொழியாக்க முடியாது.

அடுத்து தமிழ், வங்காளி முதலிய மொழிகள் இலக்கிய மொழிகளாயும், பேசும் மொழிகளாகவும் விளங்குகின்றன. ஆனால் இவை நாட்டிலனைவருக்கும் புரியாத மொழிகள்.

ஹிந்தியைப் பொறுத்தவரை இதை 15கோடிமக்கள் பேசுகிறார்கள். நாட்டின் பல்வேறு பாகங்களிலும் வேறுபலரும் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் சட்டசபையில் பேசக்கூடியஅளவுக்கு, கலை, விஞ்ஞானம் வளர்க்கக்கூடிய அளவுக்கு தேர்வுபெற்ற மொழியல்ல இது.

ஜனநாயகம் என்பது மக்களின் பேச்சின் அடிப்படையில், விவாதத்தின் அடிப்படையில் அமைந்தது. ஜனநாயகம் சரிவர நடைபெற பல மனித அனுபவங்களையும் பிரித்து விவரிக்கக் கூடிய மொழி தேவை. எஸ்கிமோவின் அனுபவங்களை வெளியிட எப்படி 'பனி' என்பதற்கு பல சொற்கள் தேவையோ அதே வாறு உயரிய கலாச்சாரத்தை அடைந்த, சிக்கல்நிறைந்த ஒரு சமுதாயத்தின் வாழ்வில் ஜனநாயகம் நடைபெறவேண்டுமெனில் சிறு வேறுபாடுகளையும் பிரித்துக்கூறக்கூடிய சன்னமான பொருட்கள்பற்றியும் ஆழமான எண்ணங்களோடு சிந்தித்து விவாதிக்கத்தக்க சொற்களையும், இலக்கணத்தையும்கொண்ட மொழி தேவை. இளம் இலக்கியத்தையுடைய ஹிந்திமொழி இந்நிலையி லில்லை.

ஆங்கிலம் இந்நாட்டில் நூறுவருடங்களாக இந்திய கலாசார மொழியாகத் திகழ்ந்திருக்கிறது. உலகின் பல்வேறு மொழிகளோடு தொடர்புகொண்டு சன்னமான பொருள்பற்றி திண்ணமாக பேசக்கூடிய சொற்களையும், இலக்கியத்தையும், பெற்றிருக்கிறது. மகாத்மாகாந்தி முதல்முதலில் 'பகத்கீதையை' எட்வின் அர்னால்ட் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பில்தான் படித்தறிந்தார். இவ்விதம் நம் பண்டைப் பண்புபற்றியும் நாம் அறிய

ஆங்கிலத்தையே பயன்படுத்திவந்திருக்கிறோம். எப்படி வட மொழி ஆட்சிமொழியாகவும், இலக்கியமொழியாகவும் திகழ்ந்த போதும் பின்னுல் பர்ஷியமொழி ஆட்சிமொழியான தும் ஆங்காங்குள்ள ப்ரக்ருத் மொழிகள் இம்மொழியைத் தழுவ ஆரம்பித்தனவோ அதேபோன்று ஆங்கிலமும் முக்கிய மொழி யானதும் ஆங்கிலத்தை இந்தியமொழிகள் தழுவலாயின.

ரயில், கார். டெலிபோன் போன்ற சொற்கள் அநேகமாக இந்திய மொழிகளனைத்திலும் இடம்பெற்றிருக்கின்றன. இவ்வித சொற்களை பிரதேசமொழியில் மொழிபெயர்த்து ஒருவருக்கு புரி யாத சில சொற்கள் சில நூல்களில் வழங்குகின்றன. உலகம் பொருள்களைக்குறிக்கும் சொற்களினுல் கலாசார வேறுபாடோ, உலக நோக்கின் வேறுபாடோ ஏற்படுவதில்லை. 'டெலிவிஷன்' என்ற சொல்லுக்கு வேறுசொல் தேடாமல் புனையாமல் 'டெலி விஷன்' என்றே நம் மொழிகளிலும் கூறுவதால் நம் மொழிகளின் கலாசார அடிப்படை குலைந்துவிடாது. "எண்ணங்களைக் குறிக் கும் சொற்களும் சொற்ருெடர்களும், சொற்கோர்வைகளுமே" (சொற்ருெடர்களும்) மொழியின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின் றன. பொருள்களைக்குறிப்பின் அவ்விதமன்று. ஆங்கிலச்சொற் களையும், மற்ற மேனுட்டுச்சொற்களையும் தேவையானபோது அப் படியே எடுத்துக்கொள்வதால் நம் மொழி வளருமேதவிர குலை யாது. ஆங்கிலத்தை நமது இந்திய ஆட்சிமொழியாக வருங் காலத்திற்கெல்லாம் நீடிப்பதே பல வகைகளிலும் பொருந்தும் செயலென்பது என் துணிவு.

பிரதேச மொழி, மற்றும்அகில இந்திய மொழியாக ஹிந்தி, வெளியுலகத்தொடர்புக்காகஆங்கிலமும்ஆகமூன்றுமொழிகள்பயில வேண்டுமென்று நம் மாணவர்களை வற்புறுத்துவது வீண்செயலே யாகும். எந்த மொழியை வெளியுலகத் தொடர்புக்காகவும், விஞ் ஞான வளர்ச்சிக்காகவும் பயிலுகிறோமோ அதுவே அகிலஇந்திய மொழியாகவும் திகழமுடியுமென்பதே நம் எண்ணம்.

மொழி என்பது மனிதன் சிந்திப்பதற்கும், வளர்ச்சி பெற வும் அவன் உபயோகிக்கும் ஒரு சாதனம் என்பதை எண்ணி, உணர்ச்சிகளுக்கு அடிமையாகாமல் மொழியை வளர்க்கவேண்டு மென்பதை நினைவிலிருத்திச் செயல்படுவோம்.

# மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

## I. சங்க வெளியீடு

| | | | ரூ. | அ | ப |
|---|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக் கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | கணுநூல் (5) இனியது நாற்பது (உரை) | — | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 8 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாக யோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | — | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப் பொருட்பாடம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பக மூலமும் உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24. | குருமொழி வினு விடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகை திருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30. | ஞானமிர்தக் கட்டளை | — | 0 | 3 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 33. | உவமான சங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 |
| 49. | கூடத்பராணம் | — | 0 | 10 |
| 50. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 |
| 51. | அரும்பொருள் விளகக நிகண்டு | — | 1 | 4 |
| 52. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 |
| 53. | பாப்பாவினம் | — | 0 | 10 |
| 54. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 |
| 55. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 |
| 56. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 |
| 57. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 6 |
| 58. | கலைசைக்கோவை | — | 0 | 12 |
| 59. | பெருந்தொகை | — | 5 | 0 |
| 60. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 |
| 61. | சிராமலைக்கோவை | — | 0 | 12 |
| 62. | மத்யவியாயோகம் | — | 0 | 2 |
| 63. | அமிர்தரஞ்ஜநி | — | 0 | 2 |
| 64. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 |
| 65. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 |
| 66. | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 |
| 67. | மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் | — | 2 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் ''செந்தமிழ்'' இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4 - 50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

---

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.